# பண்ணுருட்டி நகராட்சி

## *மன்ற கூட்ட அழைப்பிதழ்*

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **மார்கழி 25 , நாள் 09.01.2023** திங்கள்கிழமை **நேரம் முற்பகல் 11.30** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 09.01.2023-ந் தேதி திங்கள்கிழமை **முற்பகல் 11.30** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

**1.** தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் "தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம்" என்ற தலைப்பில் தூய்மை நகருக்கான பல்வேறு நடவடிக்கைகள் மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் கடந்த ஜுன் மாதம் 3ந் தேதியன்று துவங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பல்வேறு நடவடிக்கைகளுக்கான பேனர்கள், துண்டுப்பிரசுரங்கள், உள்ளூர் அச்சகங்களில் தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. பள்ளிகளில் விழிப்புணர்வு நடவடிக்கைக்காக ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி உள்ளிட்டவைகளும் நடத்தப்பட்டு அதற்கான பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.. கடந்த 03.11.2022 அன்று நகரில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் பங்கேற்கும் விதமாக TOYCATHON என்ற மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையிலான திடக்கழிவுகளை மறுசுழற்சி மற்றும் மறுபயனாக்குதல் உள்ளிட்டவைகளை வலியுறுத்தும் விதமான கண்காட்சி சுப்பராய செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்க வேண்டியுள்ளது. மேற்காணும் நடவடிக்கைகளுக்கான செலவினம் தோராயமாக ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இச்செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 1618/2022/எச்2)**

**2.** இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகளின் நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்யவும் மற்றும் சாக்கடைக் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் தேங்கியுள்ள இடங்களில் சாக்கடைக்கழிவு நீரை தேவைக்கேற்ப அவ்வப்போது செப்டிக் டேங்க் லாரி கொண்டு அகற்றும் பணிக்கான 2022 – 2023 மற்றும் 2023 – 2024 ம் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 4287/2022/எச்2)**

3. தூய்மை இந்தியா இயக்கம், பண்ணுருட்டி நகரை குப்பையில்லா நகரமாக சுய விளம்புகை செய்து மூன்று நட்சத்திர தரச்சான்றிதழ் பெறும் நடவடிக்கைக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய நகர்புற மற்றும் உள் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் சார்பிலான மூன்றாம் நபர் ஆய்விற்கு ஏதுவாக (Third party Inspection) பொது இடங்கள் மற்றும் வணிகப் பகுதிகளில் இரட்டைக் குப்பைத் தொட்டிகள் (Twin - Bins) வைக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றை அரசு சார்ந்த நிறுவனங்கள் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்: 4288/2022/எச்1)**

4. தூய்மை இந்தியா இயக்கம், பண்ணுருட்டி நகரை திறந்தவெளிக் கழிப்பிடமில்லாத நகரமாக சுய விளம்புகை செய்து ODF+ மத்திய சான்றிதழ் பெறும் பொருட்டு அரசின், நகர்புற மற்றும் உள்விவகாரங்கள் அமைச்சகத்தின் சார்பிலான மூன்றாம் நபர் ஆய்விற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நபர் ஆய்விற்கு ஏதுவாக ( Third party Inspection ) அனைத்து பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளில் தேவையான வாஷ்பேசின், முகக்கண்ணாடி, நாப்கின் இன்ஸினரேட்டர், குப்பைத் தொட்டிகள் உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகளை வாங்கிக் கொள்வதற்கான தோராய செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 4289/2022/எச்1)**

5. இந்நகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகனமேடையில், சடலங்களை தகனம் செய்து பராமரிக்கும் பணிக்கு 2023- 24 ம் ஆண்டிற்க்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான மதிப்பீடு ரூ. 8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 904/2022/எச்1)**

6. தூய்மை இந்தியா இயக்கம் 2.0 ன் கீழான கழிப்பறை 2.0 முகாமில் பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகளில் பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கும் வகையில் Q.R Code, Feedback System அமைக்கவும், கழிப்பறைகளின் சுவர்களில் வர்ணம் பூசி ஸ்லோகங்கள் எழுதவும்,

பெயர்பலகைகள் அமைக்கவும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடித ந.க.எண்: 2521/2022/SBM2 05.12.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நடவடிக்கைகளுக்கான தோராய செலவினம் ரூ. 50,000/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 4202/2022/எச்1)**

7. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு காப்பீடு டிசம்பர் 2022 - ல் முடிவடைவதால் கீழ்க் கண்ட வாகனங்களுக்கு காப்பீடு தொகையை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ். கோ. லிமிட் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வா.எண் | வாகனம் | எண்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN 31 BM | 8044 | 18241.00 |
| 2 | TN 31 BM | 8052 | 18241.00 |
| 3 | TN 31 BM | 7864 | 32552.00 |
| 4 | TN 31 AF | 8169 | 19112.00 |
| 5 | TN 31 BM | 8024 | 18241.00 |
| 6 | **மொத்தம் ரூ.** | | **106388.00** |

<u>அலுவலகக்குறிப்பு-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

3) பொதுசுகாதாரப்பணி என்பதால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று காப்பீடு தொகை செலுத்தி உள்ளதை மன்றம் ஏற்கலாம்

**(கோப்பு எண்: 4123/2022/எச்1)**

8. தூய்மை இந்தியா இயக்கம், மத்திய அரசின் தூய்மை நகரங்களுக்கான கணக்கெடுப்பில் பங்கேற்று பண்ணுருட்டி நகரம் குப்பையில்லா நகரம் என சுய பிரகடனம் செய்வதற்காக நகர்மன்ற தீர்மானத்தின் படி 25.11.2022 நாளிட்ட நாளிதழ் விளம்பரம் மூலம் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் கோரப்பட்டதில் எவ்வித ஆட்சேபணைகளும் வரப்பெறவில்லை. எனவே பண்ணுருட்டி நகரம் குப்பையில்லா நகரம் என்பதை உறுதி செய்து சுயபிரகடனம் செய்ய மன்றத்தின் தீர்மானத்திற்கு வைக்கப்பட்டுள்ளது..

<u>அலுவலகக்குறிப்பு-</u>

பண்ணுருட்டி நகரம் குப்பையில்லா நகரம் என சுய பிரகடனம் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**(கோப்பு எண்: 3001/2022/எச்2)**

9. வீடுகள் தோறும் சென்று கொசுப் புழுக்களைக் கண்டறிந்து அழிக்கும் DBC பணியாளர்களின் பணிக்கான நகர்மன்ற அனுமதி 30.11.2022 உடன் முடிவடைந்துவிட்டது. தற்போது மழை விட்டுவிட்டு பெய்து வருவதால் கொசுப்புழுக்கள் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மேலும் மூன்று மாதங்களுக்கு 01.12.2022 முதல் 28.02.2023 வரை DBC

பணியாளர்களின் பணியினை நீட்டித்துக்கொள்ளவும், நவம்பர் மாதத்திற்கான கூடுதல் செலவினம் ரூ. 40380/-க்கு பின்னேற்பும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான செலவினம் ரூ. 9.98 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

3) நவம்பர் 2022 க்கான கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

4) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோப்பு எண்: 2081/2022/எச்2)**

**10.** தூய்மை இந்தியா இயக்கம், பண்ணுருட்டி நகரை திறந்தவெளிக் கழிப்பிடமில்லா நகரமாக சுய பிரகடனம் செய்வதற்காக, நகர்மன்ற தீர்மானத்தின் படி 24.11.2022 நாளிட்ட நாளிதழில் ஆட்சேபணைகள் கோரி விளம்பரம் செய்யப்பட்டதில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே பண்ணுருட்டி நகரை திறந்த வெளிக்கழிப்பிடமில்லா நகரமாக சுய பிரகடனம் செய்ய மன்றத்தின் தீர்மானத்திற்கு வைக்கப்பட்டள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>

மன்றம் திறந்தவெளிக் கழிப்பிடமில்லா நகரம் என சுய பிரகடனம் செய்ய தீர்மானிக்கலாம்.

**(கோப்பு எண்: 3001/2022/எச்2)**

**11.** உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டிகள் , மின்னனு வாக்கு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவிற்கு தேவையான இதர பொருட்கள் விருத்தாச்சலம் அரசு சேமிப்பு கிடங்கில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது . அதற்கான மாத வாடகை ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2021 வரையிலான 24 மாதங்களுக்கு ரூ .39,136/-ஐ (ரூபாய் முப்பத்தி ஒன்பதாயிரத்து நூற்று முப்பத்தி ஆறு மட்டும் ) மேலாளர், அரசு சேமிப்பு கிடங்கு , விருத்தாச்சலம் அவர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியிலிருந்து உரிய நடைமுறைகளை பின்பற்றி மாவட்ட ஆட்சி தலைவர், கடலூர் அவர்களின் பெயரில் வங்கி வரைவோலையினை அனுப்பி வைக்க கோரி மாவட்ட ஆட்சி தலைவர், கடலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொகை ரூ .39,136/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 243/2020/எப்1**

**12.** சென்னை. உயர்நீதிமன்ற வழக்கு எண் Cont.Pet.No.2797 of 2022 in W.P.No.13863 of 2012 திரு.V.ஆறுமுகம் த /பெ வேணுகோபால் என்பவர் தொடர்ந்துள்ள வழக்கில் நகராட்சி ஆணையர், பண்ருட்டி அவர்களை 4-வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கு கடந்த 16.12.2022 அன்று விசாரணைக்கு வரப்பட்டு வருகிற 06.01.2023 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் வழக்கினை நகராட்சி சார்பாக

ஆஜராகி நடத்திட வக்காலத்து நமூனா மற்றும் வழக்கறிஞர் கட்டணம் வழங்க கோரி திரு .சஞ்சய் காந்தி, அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்காணும் வழக்கிற்கு பண்ருட்டி நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/- திரு.சஞ்சய் காந்தி, அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண். 1492/2022/எப்1**

13. பண்ணுருட்டி நகராட்சியில் வரும் பொங்கல் பண்டிகை 2023 திருநாளில் கெடிலம் ஆற்றங்கரையில் வருடம் தோறும் உழவர் திருநாளுக்கு அடுத்தநாள் ஆற்றுத்திருவிழா நடைபெறும். விழாவின்போது, நகரிலும், மற்றும் நகரின் அருகாமையில் உள்ள கிராமங்களிலிருந்தும் சாமிகள் தீர்த்த வாரி செய்ய பல்லக்குகளில் வருகை தந்து மாலை நேரத்தில் கோயில்களுக்கு திரும்பி செல்லும், அச்சமயத்தில் பொதுமக்கள் பல கிராமங்களில் இருந்து கெடிலம் ஆற்றிற்கு திருவிழாவை கண்டு களிக்க வருகை தந்து பின்பு வீடு திரும்புவார்கள்.

எனவே பொதுமக்கள் வருவதற்கு ஏதுவாகவும், சாமி சிலைகள் நிற்பதற்கு ஏதுவாகவும், கெடிலம் ஆற்றுப்படுக்கையில் தற்காலிகமாக நடைபாதைக்கு கிராவல் மண் எடுத்து சீர் செய்திடவும் சமப்படுத்திடவும் சாமிகள் நிற்பதற்கு கொட்டகைகள் அமைத்திடவும் வரும் பொது மக்களுக்கு ஆண் பெண் தனித்தனியே தற்காலிக கழிப்பிட கொட்டகை அமைக்கவும் குடிநீர் மற்றும் விளக்குகள் அமைக்கவும் தோராய மதிப்பீடு ரூ3.00 லட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2022-23ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்,

**(ந.க.எண்.5007/2022/இ1)**

14. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 காமராஜ் நகர் OCCக்கு 15CFC 2021-22 திட்டத்தின் கீழ் Organic Shredder Machine மற்றும் Shed அமைக்க பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி, பணியை ஆரம்பிக்கும்போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தன் பெயரில் பணி நிறுத்தப்பட்டது. மேற்படி பணியை துவங்க வார்டு எண்.07 ஆ.ப.சிவராமன் நகரில் உள்ள OCCக்கு அருகில் இடமாற்றம் செய்து Organic Shredder Machine மற்றும் Shed அமைக்க அதே மதிப்பீட்டில் அதே ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண். **2890**/2021/இ1)

**15.** பண்ணுருட்டி நகராட்சிக்கு - KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23) நிதியின் கீழ் வார்டு எண் A Block 21 TS No. 33, வார்டு எண்.2 விழமங்கலம் பிள்ளையார் கோவில் குளம் துார்வாரி மேம்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.42.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.G.O.(4D)No.18 நாள்.21.10.2022 தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 22.11.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட )** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு.வி.சுரேஷ்பாபு , ஒப்பந்ததாரர் , கடலூர் | 42.00 | 0.24 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.T.சேஷாத்திரி , ஒப்பந்ததாரர் , கடலூர் | 42.00 | 4.99 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வி.சுரேஷ்பாபு , கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.24 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. மன்றம் பதிவு செய்யலாம்..

**(கோ.எண்.1091/2022/இ1)**

**16.** பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 சேர்மன் A.மணிநகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 8th SHPC 2018-19ம் ஆண்டிற்கு நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு அடித்தளம் அமைக்கும் பொழுது பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேலும், திட்டப்பணி என்பதால் மேற்கண்ட பணிக்கு மாற்றுப் பணியாக கெடிலம் ஆற்றுபடுக்கையில் உள்ள உலர் கழிவுகளை BIO-Mining முறையில் அகற்ற திட்ட பிரேரணை தயாரிக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.755 நாள்.31.08.2021 அனுமதி பெற்று மேற்கண்ட பணியை ரத்து செய்தும் திருத்திய நிர்வாக அனுமதியாக BIO-Mining பணி வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்ட நாள்.09.09.2022ல் நுண்ணுயிர் உரமாக்கும் பணியை ரத்து செய்ய இயலாது எனவும் மாற்று இடம் தேர்வு செய்து பணியியை துவங்க அறிவுறுத்தப்பட்டதன்

அடிப்படையில் வார்டு எண்.09 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வார்டு எண்.11 சேர்மன் A.மணிநகர் பணியினை இடம் மாற்றம் செய்து நுண்ணுயிர் உரமாக்கும் மையம் பணி (MCC) மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும், வார்டு எண்.11 சேர்மன் A.மணிநகர் பகுதியில் புதியதாக ஆழ்துளைகுழாய் கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.5,10,000/- இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த தொகை போக மீதமுள்ள ரூ.52,90,000/- இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை (SBM) தூய்மை இந்தியா திட்டம் 2018-19 8th SHPC 2018-19ம் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். **3432** / 2**018** /**இ1**)

**17.** மாண்புமிகு தமிழக நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலகத்தில் கடந்த 02.12.2022 அன்று கடலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளின் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் தொடர்பான விவரத்தினை தமிழ் தினசரி நாளிதழான தினகரன் நாளிதழில் நாள்.02.12.2022 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு (Kal Publications (P) LTD) நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.40.000/-யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(கோ. எண்.**4262**/ 2**022** /**இ1**)

.18 பண்ணுருட்டி நகராட்சி - வருவாய் நிதி 2022-23ன் கீழ் வார்டு எண். 28 டோபி காலனி பிரதான சாலை, முதல் மற்றும் 2வது குறுக்குத் தெரு ஆகிய பகுதிகளில் பருவ மழைக் காலங்களில் மழைநீர் தேங்குவதால் அப்பகுதி பொதுமக்களுக்கு போக்குவரத்தில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. மேலும், நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்க கேட்டுக்கொண்டதன் பேரிலும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் மேற்கண்ட பகுதியில் வடிகால் வாய்க்கால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,50,000/-ற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2022-23ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.62/2022/இ1)**

**19.** பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2022-23ன் கீழ் வார்டு எண்.01 சிவன் படை தெரு (Unicode No.095001R004) பகுதியில் பருவ மழைக் காலங்களில் மழைநீர் தேங்குவதால் அப்பகுதி பொதுமக்களுக்கு போக்குவரத்தில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. மேலும், நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்க கேட்டுக்கொண்டதன் பேரிலும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் மேற்கண்ட பகுதியில் வடிகால் வாய்க்கால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/-ற்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2022-23ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 63/2022/இ1**

**20.** பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2022-23ன் கீழ் வார்டு எண்.07 அ.ப.சிவராமன் நகர் 4வது குறுக்குத் தெரு (Unicode No.095007R112), 5 வது குறுக்குத் தெரு (Unicode No.095007R111) மற்றும் 6வது குறுக்குத் தெரு (Unicode No.095007R110) ஆகிய பகுதிகள் தாழ்வான பகுதியாக உள்ளதால் பருவ மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்கள் மேற்கண்ட பகுதியில் மழை நீர் வடிகால் அமைக்க கேட்டுக் கொண்டதன் பேரிலும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,90,000/-ற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2022-23ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 64/2022/இ1)**

**21.** பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். A, பிளாக் எண்.33, நகரளவு எண்.16/5A, 18/8B, 18/7 (துணை நகரளவு எண்.14/21, 15/10, 15/35)-ல் 1.49 1/2 ஏக்கர் அல்லது 6050.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,

கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.962/2021/கமா, நாள்.14.10.2022-ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.57/2022 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**<u>மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>**

| | |
|---|---|
| **மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு** | 1.49 1/2 ஏக்கர் (அ) 6050.00 ச.மீ |
| **கோரியமனைகள்** | 40 |
| **ஒதுக்கியமனைகள்** | 39 |

**<u>பொது ஒதுக்கீடு</u>**

**<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்படவேண்டியது</u>**

| | |
|---|---|
| **மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகள்** | 1199.88 ச.மீ |
| **உள்ளாட்சிக்கு (A)** | 24.65 ச.மீ |
| **மின்சார துறைக்கு (B)** | 24.65 ச.மீ |

மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 3360/2021, நாள்.03.12.2021-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால், சிறுபாலம், நகராட்சி மற்றும் மின்சாரவாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் முள்வேலி அமைத்தல், தெருவிளக்கு அமைத்தல் மற்றும் குடிநீர் வசதிக்காக PVC குழாய் அமைத்தல் பணிக்காக பொறியியல் பிரிவு மூலம் ரூ. 12,68,000/-க்கு (ரூ.பன்னிரெண்டு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி கருவூலத்தில் ரசீது எண்.095/001/1/22-23/0012702, நாள்.01.12.2022-ல் அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.3087/2021/F1)**

**22.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25, தட்டாஞ்சாவடி காளியம்மன் கோவில் திடலில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைக்க பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ3/5262/21 நாள்.29.11.2022 அன்று

அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.12.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட )** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி. R.A. கார்மிகா<br>நெ.207/4 திருவள்ளுவர் தெரு,<br>அண்ணா நகர் ,<br>கொளப்பாக்கம், | 4.50 | 0.04 சதவிகிதம் குறைவு |
| 2 | M/S RAK இண்டஸ்டீரிஸ்<br>விநாயகர் கோவில் அருகில்,<br>கொளப்பாக்கம், | 4.50 | 1.08 சதவிகிதம் அதிகம் |

<u>**அலுவலக குறிப்பு**</u>-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் செல்வி. R.A.கார்மிகா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.04 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 2739/2022/இ2)**

**23.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27, காமராஜ் தெரு, டைவர்ஷன் ரோடு சந்திப்பு அருகில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைக்க பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ3/5262/21 நாள்.29.11.2022 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.12.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி. R.A. கார்மிகா<br>நெ.207/4 திருவள்ளுவர் தெரு,<br>அண்ணா நகர் ,கொளப்பாக்கம், | 4.50 | 0.04 சதவிகிதம் குறைவு |
| 2 | M/S RAK இண்டஸ்டீரிஸ்<br>விநாயகர் கோவில் அருகில்,<br>கொளப்பாக்கம், வண்டலூர் சென்னை. | 4.50 | 1.08 சதவிகிதம் அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் செல்வி. R.A.கார்மிகா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.04 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 2739/2022/இ2)**

**24.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 07, திருவள்ளுவர் நகர் ஆர்ச், ரெயில்வே கேட் அருகில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைக்க பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ3/5262/21 நாள்.29.11.2022 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.12.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டைவிட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி. R.A. கார்மிகா<br>நெ.207/4 திருவள்ளுவர் தெரு,<br>அண்ணா நகர் ,<br>கொளப்பாக்கம், | 4.50 | 0.04 சதவிகிதம் குறைவு |
| 2 | M/S RAK இண்டஸ்டீரிஸ்<br>விநாயகர் கோவில் அருகில்,<br>கொளப்பாக்கம்,<br>வண்டலூர் சென்னை. | 4.50 | 1.08 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு**-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் செல்வி. R.A.கார்மிகா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.04 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 2739/2022/இ2)**

**25.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26, களத்துமேடு திடலில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைக்க பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ3/5262/21 நாள்.29.11.2022 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.12.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டைவிட) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி. R.A. கார்மிகா<br>நெ.207/4 திருவள்ளுவர் தெரு,<br>அண்ணா நகர் ,<br>கொளப்பாக்கம், | 4.50 | 0.04 சதவிகிதம் குறைவு |
| 2 | M/S RAK இண்டஸ்டீரிஸ்<br>விநாயகர் கோவில் அருகில்,<br>கொளப்பாக்கம்,<br>வண்டலூர் சென்னை. | 4.50 | 1.08 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு**-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் செல்வி. R.A.கார்மிகா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.04 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 2739/2022/இ2)**

**26.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 தீயணைப்பு நிலைய அலுவலகம் அருகில் உள்ள நான்கு முனை சந்திப்பில், 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைக்க பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ3/5262/21 நாள்.29.11.2022 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.12.2022

ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டைவிட) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி. R.A. கார்மிகா<br>நெ.207/4 திருவள்ளுவர் தெரு,<br>அண்ணா நகர் , கொளப்பாக்கம், | 4.50 | 0.04 சதவிகிதம் குறைவு |
| 2 | M/S RAK இண்டஸ்டீரிஸ்<br>விநாயகர் கோவில் அருகில்,<br>கொளப்பாக்கம், வண்டலூர் சென்னை. | 4.50 | 1.08 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் செல்வி. R.A.கார்மிகா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.04 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 2739/2022/இ2)**

**27.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.22.5க்கு இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள ந.க.எண்.அ3/5262/21 நாள்.29.11.2022 தேதிய கடிதத்தில் கீழ்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22** | | |
| 1 | வார்டு எண் 25, தட்டாஞ்சாவடி காளியம்மன் கோவில் திடலில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல். | 4.50 |
| 2 | வார்டு எண் 27, காமராஜ் தெரு, டைவர்ஷன் ரோடு சந்திப்பு அருகில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் | 4.50 |
| 3 | வார்டு எண் 26, களத்துமேடு திடலில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் | 4.50 |
| 4 | வார்டு எண் 07, திருவள்ளுவர் நகர் ஆர்ச், ரெயில்வே கேட் அருகில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் | 4.50 |

| | | |
|---|---|---|
| 5 | வார்டு எண் 08, தீயணைப்பு நிலைய அலுவலகம் அருகில் உள்ள நான்குமுனை சந்திப்பில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் | 4.50 |
| | | 22.50 |

<u>அலுவலக குறிப்பு:-</u> (ந.க.எண்.2739/இ2/2022)

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**28.** பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழைய தெரு விளக்குகளை புதிய LED விளக்குகாக மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.239.74 லட்சத்திற்கு 4 ஒப்பந்த புள்ளிகளும் இடைவெளி நிரப்புவதற்கு புதிதாக LED விளக்குகள் அமைப்பதற்கு ரூ.28.89 லட்சத்திற்கு 5 ஒப்பந்தபுள்ளிகளும் கடந்த 27.12.2022 அன்று ஆன்லைன் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பதிவிறக்கம் செய்ததில் ஒவ்வொரு ஒப்பந்தபுள்ளிகளும் சுமார் 1700 பக்கங்களுக்கு மேல் இருந்ததால் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த புள்ளியை பிரிண்ட்(Print) எடுக்க இவ்அலுவலகத்தில் போதிய வசதி இல்லாததால் பண்ருட்டியில் உள்ள A.S Communications கடையில் பிரிண்ட் (Print) செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு செலவினும் ரூ.8,049/- உரிய தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்

**(கோ.எண்.49/இ2/2022)**

29. பண்ருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள Change Over Switch மற்றும் அலுவலகம் பின்புறம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற ஜெனரேட்டருக்கு பயன்படுத்தப்படும் Change Over Switch பல வருடங்களாக பயன்படுத்தப்பட்ட வருகிறது. தற்போது பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ள நிலையில் தினம் தினம் ஜெனரேட்டர் இயக்க வேண்டி உள்ளதால் புதிதாக இரண்டு எண்கள் 200 Amp மற்றும் 100 Amp Change Over Switch வாங்கி அளிக்க தயாரிக்கப்பட்ட மதீப்பீடு ரூ.43,000/- (நாற்பத்து மூன்றாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோ.எண். **61/இ2/2022)**

**நகர்மன்ற தலைவர்**

**பண்ணுருட்டி நகராட்சி**